# மே - 12- வெள்ளி

**புனித பங்கிராஸ்**

**நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். யோவா. 14:1**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 13 : 26 – 33

அக்காலத்தில் சவுல் பிசிதியாவிலுள்ள அந்தியோக்கிவுக்கு வந்தபோது அவர் தொழுகைக் கூடத்தில் கூறியது: "சகோதரரே, ஆபிரகாமின் வழிவந்த மக்களே, இங்கு இருப்போருள் கடவுளுக்கு அஞ்சி நடப்போரே, இந்த மீட்புச் செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது. எருசலேமில் குடியிருக்கும் மக்களும் அவர்களுடைய தலைவர்களும் அம்மீட்பரை அறியவில்லை ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படும் இறைவாக்கினரின் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைப் புரிந்து கொள்ளவில்லை ஆயினும் அவருக்கு அவர்கள் தீர்ப்பளித்தபோது அவ்வார்த்தைகள் நிறைவேறின. சாவுக்குரிய காரணம் எதுவும் அவரிடம் இல்லாதிருந்தும், அவரைக் கொல்ல அவர்கள் பிலாத்திடம் கேட்டார்கள். மறைநூலில் அவரைப்பற்றி எழுதியுள்ள அனைத்தையும் அவர்கள் செய்து முடித்தார்கள். பின்பு அவரைச் சிலுவையிலிருந்து இறக்கிக் கல்லறையில் வைத்தார்கள். ஆனால் இறந்த அவரைக் கடவுள் உயிரோடு எழுப்பினார். அவர் கலிலேயாவிலிருந்து தம்முடன் எருசலேம் வந்தவர்களுக்குப் பல நாள்கள்தோன்றினார். அவர்கள் இப்போது அவர்தம் சாட்சிகளாக மக்கள் முன் விளங்குகின்றார்கள். இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் பிள்ளைகளாகிய நமக்கென நிறைவேற்றினார். இதுவே நாங்கள் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி. இதுபற்றி இரண்டாம் திருப்பாடலில், "நீரே என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்" என்று எழுதப்பட்டுள்ளது.

**பதில்பாடல் :** நீரே என் மைந்தர் இன்று உம்மைப் பெற்றெடுத்தேன்

## நற்செய்தி : யோவான் 14 : 1 – 6

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில், "உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்" என்று சொல்லியிருப்பேனா? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்றார். தோமா அவரிடம், "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?" என்றார். இயேசு அவரிடம், "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" என்றார்.

**தியானம்:** இயேசு தம் சீடர்களோடு இறுதி முறையாக உணவருந்தும் போது யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுக்கப் போவதை இயேசு முன்னறிவிக்கின்றார். பேதுரு கூட தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு கூறுகின்றார். இதையெல்லாம் கேட்ட சீடர்களின் உள்ளத்தில் ஒரே கலக்கம். தங்கள் குருவும் தலைவருமாகிய இயேசு ஏன் இப்படிப் பேசுகின்றார் என அவர்கள் திகைக்கின்றார்கள். அப்பொழுது இயேசு தம் சீடர்களுக்கு ஆறுதல் கூறுகின்றார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்" கவலையை விட்டொழித்து இறைவனில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதே அவர் விருப்பம். கடவுளால் அனுப்பப்பட்டு இவ்வுலகிற்கு வந்த இயேசுவிடம் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். இவ்வாறு சீடர்கள் கடவுளையும் இயேசுவையும் நம்பி ஏற்பதாக இருந்தால் அவர்களுக்கு கடவுளோடு எந்நாளும் நிலைத்து வாழுகின்ற பேறு கிடைக்கும். இதைக் குறிப்பிட்டே இயேசு "என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன" என்றும் "நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருப்பீர்கள்" என்றும் குறிப்பிடுகின்றார். கடவுளின் அன்பில் நிலைத்திருப்போருக்கு இயேசு நிலைவாழ்வை அளிக்கின்றார். அந்த வாழ்வை பெற்றுக்கொள்ள நாம் இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும். நிலை வாழ்வுக்கு வழியான இயேசுவை பின்பற்றி வாழ்திட அருள் தாரும் இயேசுவே ஆமென